# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு


சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனர்

தொகுதி-4] தி. பி, 2018 கும்பம் (10-3-1987) 85 காசுகள் (இதழ் எண்: 82) [பகுதி 44-45


# இராசீவின் குட்டிப் பூசாரிகள் அதிகாரம் கொடி கட்டிப் பறக்கிறது!

## தமிழகத்தை நிலையாக வடநாட்டுக்கு அடிமைப் படுத்தத் துடிக்கிறார்கள்!







“நடுவணரசு எல்லாவற்றையும் கவனமாகக் கவனித்துக் கொண்டு வருகிறது. இளைய தலைமையமைச்சர் இராசீவ் காந்தியின் பார்வையிலிருந்து யாரும் தப்ப முடியாது” -என்று தமிழக சட்டப்பேரவையில் இந்திராப் பேராய உறுப்பினர் ஒருவர் தமிழ்க எதிர்க்கட்சி உறுப்பினர்களை அச்சுறுத்திப் பேசியிருக்கிறார். அவரும் ஒரு தமிழர் என்ற பிறவியில் உலவுபவர்.

இராசீவ் காந்தி ஏதோ பூதம் என்று நினைத்துக் கொண்டு அவர் பேசிய அச்சுறுத்தல் பேச்சு அவரின் அறியாமையை மட்டுமன்று, கீழடிமைத்தனத்தையும் நன்கு புலப்படுத்துகின்றது. சட்டமன்ற மரபுக்கே மாறான கேடான இவ்வகைப் பேச்சுகளை அவைத்தலைவர் நல்லவேளை அவைக்குறிப்பிலிருந்து நீக்கச் சொல்லியுள்ளது பாராட்டக் கூடியது.

மேலே குறிப்பிடப்பெற்ற அரம்பத்தனமான பேச்சைப் பேசிய சட்டமன்ற உறுப்பினர் மட்டுமல்லர், இங்குள்ள இந்திராப் பேராயக் கட்சித் தலைவர்கள் எனப்படுவோர் பலரும் இம்மாதிரிப் பேச்சுகளை அண்மைக் காலங்களில் பேசி வருவது அனைவர்க்கும் தெரிந்ததே! குறிப்பாக அனைத்திந்திய இந்திரா பேராயக் கட்சி செயலர்களில் ஒருவரான மூப்பனார் அவர்களும், தமிழ்நாட்டு மாநிலத் தலைவர் பழனியாண்டி அவர்களும் கூட, ஏன் முன்னாள் இளைஞர் அணித்தலைவர் தங்கபாலு அவர்களும் இன்னும் அவரைச் சார்ந்தவர்களும் கூட, பல

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம். உ. த. மு. க

# ஐயோ தமிழகமே!

## அரசும் ஞாயமும்...!

உழவர் போராட்டம் காரணமாகக் கெடு நடந்து கட்டிய மின் கட்டணத் தொகைக்கு ஆண்டுக்கு 24 விழுக்காடு வட்டி கூடுதலாகச் சுமத்தப் பெற்றது. சென்னை, உயர்நெறிமன்றம் இதற்குத் தடையிட்டது. எனினும் ஒவ்வொரு குழாய்க்கும் உருபா. 5000 முதல் 10000 வரை வட்டி கட்டவில்லை என்றால், மின் இணைப்பு துண்டிக்கப்படும்; மின் கருவிகள் அகற்றப்படும் என மின் வாரியம் அதிர்ச்சி (Shock) எச்சரிக்கை விடுத்துள்ளது. காலமோ வறட்சி! குடிக்கக் கூட நீரில்லை! கால்நடைகள் அழிகின்றன! இரங்கத்தக்க நிலை! இவை எதை உணர்த்துகின்றன? அரசியல் நடைமுறைக்கும் ஞாயத்திற்கும் தொடர்பேயில்லை என்பதைத் தானே!

## வெறும் வாயளப்பு அரசு!

189 அறுவை மருத்துவர் பதவிகளை உருவாக்கியுள்ளதாக இரண்டாண்டுகளுக்கு முன் அரசு அறிவித்திருந்தது. இன்னும் செயல்பாடு இல்லை. இந்நிலையில் அரசு தேர்வாணையம் ஏற்கனவே தேர்ந்தெடுத்த 600 பேர் பணிக்காக வேறு காத்திருக்கிறார்கள்; இந்த அழகில் 200 மதிப்புநிலை மருத்துவர்களுக்கு மேலும் புதிய வேலை வாய்ப்பளிக்கப் போவதாக அரசு வாயளப்பு செய்திருக்கிறது! அந்தோ வெட்கம்!

## நடுவணரசு மாயை!

"நடுவணரசு ஒரு மாயை ஏனெனில் அதற்கு மாநிலங்களைப் போல் ஆளுவதற்கு நிலப்பகுதிகளில்லை. கல்வி, தொழில், வளர்ச்சி போன்ற துறைகளில் மாநில அரசின் அதிகாரங்கள் படிப்படியாகப் பறிக்கப்பட்டு வருகின்றன" இவ்வாறு ஒரு மாநில முதல்வர் துணிச்சலாகச் சாடியிருக்கிறார். அவர் வாயும், வன்மையுமுள்ள ஆந்திர முதல்வர் என். டி. இராமராவ்தாம் என்பது சொல்லாமலே விளங்கும்.

## பொய் சொல்லாத பொய்யர்!

"பேராய (காங்கிரசு)க் கட்சிக்குப் பொய் சொல்லத் தெரியாததால் இருபதாண்டுகளாகத் தமிழகத்தில் ஆட்சியைப் பிடிக்க முடியவில்லை" என்று திருவாய் மலர்ந்திருக்கிறார் நடுவண் துணையமைச்சர் **சிதம்பரம்.** அது சரி, நாற்பதாண்டுக் காலம் இந்தியத் துணைக் கண்டம் முழுவதையும் ஆளும் பேராய (காங்கிரசு)க் கட்சி எவ்வளவு பொய் சொல்லி இருக்க வேண்டும்!

## யானை வழிபாடு!

கோவை, சரவணம்பட்டியில் மார்ச்சில் மூன்று நாட்கள் 'யானை வழிபாடு' (கச பூசை) நடைபெற உள்ளதாம். யானைகளை வணங்குவதால் பிள்ளையார் அருளை நேரடியாகப் பெற்று உலகம் வளமுடன் வாழ வழி கிடைக்குமாம்! பெருஞ்செலவில் மேற்கொள்ளப்படவிருக்கிறது இம் மட விழா. மடாதிபதிகள் சிலரின் கொள்ளையடிப்பு இது! அது போகட்டும். இப் பூசையால், ஆப்பிரிக்காவிலும், ஈரான் ஈராக்கிலும், ஈழத்திலும் அமைதி கிட்டுமா?

## தீர்வுத் திட்டங்கள்!

இலங்கையில் படைத்துறை நடவடிக்கைகள் நீடிக்கும் வரை இனச் சிக்கலுக்கு ஓர் அரசியல் தீர்வு ஏற்படும் வாய்ப்பு இல்லை! என்று இந்தியத் தலைமையமைச்சர் இராசீவ் கூறியிருக்கிறார். ஒரு வேளை எதிரிக்குக் கால நீட்டிப்புச் செய்து கொடுத்துக் கருவிகளைத் திரட்ட வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதுதானோ இவர் கூறும் அரசியல் தீர்வு...?

## வருத்தம் போதுமா?

"கடந்த திசம்பர் 19-இல் செயவர்த்தனேவை இரண்டு இந்திய அமைச்சர் சந்தித்த போது", சில திட்டங்களை அவரே தெரிவித்திருந்தார். ஆனால் அவற்றைக் ஏற்றுக் கொள்ள அவரே இப்போது மறுப்பது வருந்தத் தக்கது" —இவ்வாறு செயவர்த்தனே போக்கினைப் பற்றி இராசீவ் வருந்தியிருக்கிறார். (தினமணி 23-2-87). இப்படி வருத்தம் தெரிவிப்பது தவிர அவர் வேறு எதுவும் செய்யப் போவதே இல்லை என்பதுதான் இவருடைய திட்டம் போலும்!

## தொடரும் நாடகம்!

"படைத்துறை நடவடிக்கையும் இனப்படுகொலையும் சிக்கலுக்குத் தீர்வாகா. அமைதியான வழிகளின் மூலமே ஈழச் சிக்கலைத் தீர்க்க முடியும்" எனவும் இராசீவ் கூறியிருக்கிறார். (பஞ்சாப் சிக்கலுக்கு இது பொருந்தாது போலும்!) தாம் தெரிவிக்கும் திட்டங்களையே ஏற்றுக் கொள்ளாத செயவர்த்தனேவிடம் இராசீவ் சொல்வது இம்மியளவேனும் பலிக்குமா? எப்படி இருந்தாலென்ன? இவர்களின் நாடகம் வெற்றிநடை போடுகிறதே!

## ஒப்பந்த விழா!

உருசியாவில் இந்திய விழா! இந்தியாவில் உருசிய விழா! இவற்றுக்கான விரிவான நிகழ்ச்சித் திட்டங்களில் இரு நாடுகளும் கையெழுத்திட்டுள்ளன. ஏதோ ஒன்று எதையோ ஒன்றை எதற்காகவோ என்னவோ செய்கிறது! ஏனோ என்று இந்நாடு எண்ணிப் பார்க்குமா?

—வணங்காமுடி.

---

## ஓர் அறிவிப்பு

'**தமிழ்நிலம்**' புதிய வடிவில் கிழமைதோறும் வெளி வரும். எல்லா வகையிலும் மேன்மேலும் இதன் பொலிவும் வலிவும் வளரவும் ஏற்பாடுகள் செய்யப் பெற்று வருகின்றன. நம் தமிழின மீட்புக்கு இதுவே சிறந்ததொரு வாளாகவும் கேடயமாகவும் திகழ்வதாகும். அனைத்து நிலைகளிலும் நம் அன்பர்கள் பெரிதும் உதவுவார்கள் என நம்புகின்றோம். அன்பர்கள் இயக்கச் செய்திகளையும் கட்டுரைகளையும் சுருக்கமாக எழுதி விடுக்கவும்.

Scanned with CamScanner

ஓய்ந்திடல் இல்லை, என் உள்ளமும், உணர்வும், உயிர்ச்செறிவும்
தேய்ந்திடல் இல்லை, என் விரல்களும் தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை, என் உடலும்; எனவே சலிப்பிலனாய்,
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன், உரைப்பேன், மக்களுக்கே!


# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு.

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-4 இதழ் எண்-82 (10-3-1987) பகுதி 43-44.



சிறப்பாசிரியர்:

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

ஆசிரியர்:

தென்மொழி மா. பூங்குன்றன்

துணையாசிரியர்கள்:

தென்மொழி. கல்லை. அருட்செல்வன்
தென்மொழி. மா. பொழிலன்

கருத்தாளர் குழு:

பறம்பை அறிவன்,
தென்னவன் கோ,
தென்மொழி. மா. சித்திரச்
செந்தாழை ஆறிறைவன்
தென்மொழி. ப. முருகவேள்,
குழந்தை. ஈகவரசன்,
வெங்காலூர். பொற்செழியன்,
தென்மொழி துரை. தென்னவன்,
ம. செ. தமிழ்மணி,
புலவர்குமர. தன்னொளியன்,
கி. குணத்தொகையன்.

கட்டுரையாசிரியர் குழு:

பாவலர். கடவூர் மணிமாறன்,
பாவலர். இளஞ்சித்திரன்,
பாவலர். ப. எழில்வாணன்,
பாவலர். கொ. செ. சின்னப்பனார்,
தமிழ்ச்சுடர் மணிமுத்து,
தமிழவேள்.

உதவியாளர் குழு:

அழ. இளமுருகன்,
வியனரசு,
வே. கோ. வெற்றிச்செல்வன்,
நெடியோன்,

அச்சீட்டாளர்:

தாமரை பெருஞ்சித்திரனார்.
தென்மொழி மின் அச்சகம்.

கழக வேளிர்:

தென்மொழி. இரா. இளம்பிறைச்
செல்வன் (பாலகங்காதரன்)

கழக அருளாளர்:

தென்மொழி. நா. இளமாறன்.

கழக அருட்கொடையாளர்:

தென்மொழி. ந. முத்துக்குமரன்,
தென்மொழி. மா. ஆறுமுகம்,
தென்மொழி. த. அரிமாவளங்கோ
எசு. ஆர். எசு. பிரான்சிசு.
தென்மொழி ஆறிறைவன்.



கட்டணம்:

| | உள்நாடு | வெளிநாடு வான் | வெளிநாடு கடல் |
|---|---|---|---|
| தனியிதழ் | 0-85 | 6-00 | 4-00 |
| ஆண்டுக் கட்டணம் | 44-00 | 320-00 | 220-00 |
| அரையாண்டுக் கட்டணம் | 22-00 | 160-00 | 100-00 |
| வாணாள் உரு. | 750 | 5000 | 3500 |

தொடர்பு முகவரி:

தமிழ்நிலம் சென்னை-600005.
தொலைபேசி: 847829


# இலங்கைச் சிக்கல்
# இராசீவ் கருத்துகள்!

இம்மாதத் தொடக்கத்தில் நிகழ்த்தப் பெற்ற குடியரசுத் தலைவரின் பாராளுமன்ற உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது, அவையில் நடந்த கருத்துரைகளுக்கு விடையளித்துப் பேசிய தலைமையமைச்சர் திரு. இராசீவ் காந்தி, தி. மு. க. உறுப்பினர் வை. கோபால்சாமி தெரிவித்த கருத்துகளுக்கு, இலங்கைச் சிக்கல் தொடர்பாகக் கூறிய விடையளிப்புக் கருத்துகள் கவனிக்கத் தக்கன.

தொடக்கத்தில் திரு. வை. கோபால்சாமி, இலங்கை அரசு மீது நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்திப் பேசியதைத் தொடர்ந்து, ''இலங்கை அரசின் படைத்துறைத் தாக்குதலுக்கு அங்குள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்கள் ஆளாகியிருக்கிறார்கள். *இந்தியா உரிய நடவடிக்கை எடுக்கக் காலந்தாழ்த்துமானால், இலங்கைத் தீவில் தமிழர்கள் ஒழித்துக்கட்டப்பட்டு விடுவார்கள்*' என்று கூறினார். இதை மற்ற தமிழக உறுப்பினர்களும் ஒப்புக்கொண்டு பேசினார்கள்.

இக் கருத்துக்கு விடையளிக்கையில்தான் இராசீவ் காந்தி கீழ் வரும் நான்கு கருத்துகளைக் கூறியிருக்கிறார்,

*''இலங்கை அரசின் படைத்துறை நடவடிக்கைகளினால் அங்குள்ள தமிழர்கள் ஒழித்துக்கட்டப்படும் ஒரு நிலை நிகழும் என்று இந்தியா நம்பவில்லை.* யாழ்ப்பாணம் தீவகப் பகுதியை அத்தகை நடவடிக்கை மூலம் இலங்கை அரசு கைப்பற்றும் என்றும் இந்தியா கருதவில்லை-'' என்றும்;

*''வடக்கு மாநிலத்திலிருப்பவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்''* எனத்தாம் நம்புவதாகவும்;

*''கோபால்சாமி குறிப்பிட்டதைப் போல இலங்கையில் வன்முறை அதிகரிக்கவில்லை''* என்றும், 'மாறாகக் குறைந்திருப்பதாகவும்;

''மீண்டும் பேச்சுகள் தொடங்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்க இலங்கை *அரசும் போராளிகள் குழுக்களும் போர் நிறுத்தம் செய்ய வேண்*

பின்பக்கம் பார்க்க

டும், இலங்கை இனச் சிக்கலுக்குப்பேச்சுகள்மூலமே தீர்வு காண வேண்டுமே யன்றிப் படைத்துறை நடவடிக்கை மூலம் அன்று'' என்றும் இராசீவ் கூறினர்.

இராசீவின் இந்த நான்கு கருத்துகளும், தமிழினத்தின் மேல் அவர் கொண்டிருக்கும் எண்ணத்தைத் தெளிவாக நாம் அறிந்துகொள்ளப் போதுமானவை ஆகும். இதற்குப் பின்னும் தமிழினத் தீர்வுக்கு (அது தமிழீழத்தைப் பற்றியதானலும் சரி, தமிழகத்தைப் பற்றியதானலும் சரி.) இராசீவ் காந்தியையோ, இந்தியாவையோ, தமிழினத்தில் உள்ள எவராவது ஒருவர் நம்பிக் கொண்டிருப்பாரானல், அவர் உண்மையிலேயே தமிழினப் போலியாகவே இருத்தல் முடியும்; அல்லது தமிழரில் பேதையாகவோ, அல்லது முழு அடிமையுணர்வு கொண்டவராகவேதான் இருக்க முடியும்.

இராசீவ் கூறிய முதல் கருத்தில், தமிழர்கள் அனைவரும் ஒழிந்தபின்தான் இந்தியா ஏதாவது நடவடிக்கை எடுப்பது பற்றிச் சிந்திக்கும் என்பதும், அவ்வாறு ஒழிந்து போவதையே இராசீவ் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர் என்பதும் உட்பொருளாக இருப்பதை, அவரை ஏமாளித்தனமாக நம்பிக் கொண்டிருக்கும் அருமைத் தமிழர்களே அருள் கனிந்து விளங்கிக் கொள்ளுங்கள்.

இரண்டாவது கருத்தில், 'யாழ்ப்பாணத் தமிழர்கள் தங்களைத் தாங்களேதாம் காத்துக் கொள்ள வேண்டும்; இந்தியாவோ, தாமோ ஒருபோதும் காப்போம் என்று எதிர்பார்க்க வேண்டாம்'-என்று அவர் புலப்படுத்தியிருப்பது விளங்க வில்லையா?

இனி, மூன்ருவதாக அவர் கூறியதில், இலங்கையில் சிங்களவர் இப்பொழுது தமிழர்களை அழித்துக் கொண்டிருப்பது அதிகமில்லையாம்; குறைவாம்; அஃதாவது இன்னும் அதிகமான எண்ணிக்கையில் தமிழர்கள் சாகடிக்கப்படவில்லையே என்று இராசீவ் கவலைப்படுவது நன்கு தெரிகிறது அன்ருே?

அடுத்து, அவரின் நான்காவது கருத்தில், போராளிகள் சிங்களப் படையினர் அழிக்க வரும் பொழுது, தங்கள் தற்காப்புக்காகக் கூடப் போராடக் கூடாது. அஃதாவது தாங்கள் எடுத்த கருவிகளைக் கீழே போட்டுவிட்டு அழிந்து போக அணியமாக இருக்க வேண்டும் - என்பது போல் பேசியிருக்கிருர் என்பது வழக்கமாகக் கூறும் அவர் அறிவுரையே!

இடைக்காலத்தில் இவரின் மாயவேண்டுகோளுக்கு இணங்கி 'போர் நிறுத்தம்' ஒன்று நிகழ்ந்தது. அக்கால் போராளிகள் அமைதியுடன் இருக்கவே, சிங்களக் கயவர்கள் அவர்களை சுட்டும் வெட்டியும் கொன்றது இராசீவுக்குத் தெரியாதது போலவே பேசியிருக்கிருர்.

இந்த நிலையில், போராளிகளும் சரி, போராடாமல் தமிழீழம் கிடைத்து விடும் என்றும், அதில் தங்களுக்கும் ஏதாவதொரு பதவி உண்டு என்றும் வாயைப் பிளந்து கொண்டு கிடக்கும் தமிழீழ முன்னுள் பாராளுமன்ற உறுப்பினர்களும் சரி, இனியும் இராசீவ் காந்தியையோ இந்தியாவையோ எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் இளித்தவாயர்களாக இல்லாமல், அனைவரும் ஒன்று கூடி, இங்குள்ள அரசியல் தலைவர்களுடன் (வேறு வழியில்லையே) கலந்து பேசி, உடனடியாக இவ்விரண்டு நாட்டிலும் அடிமைப்பட்டுக் கிடக்கும் இந்த ஏதுங்கெட்ட தமிழினம் இனிமேலாவது உயர்ந்து போவதற்கான ஒரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று மிகவும் மன்ருடி வேண்டிக் கொள்கிருேம். செய்வார்களா?

—பெருஞ்சித்திரன்.

---

சென்ற இதழ்த் தொடர்ச்சி

# கருத்தரங்கு செய்திச் சுருக்கம்!

இறுதி நிலையில், ஒப்போலை எண்ணிக்கை முடிவுகளைப் பாவலரேறு ஐயா அவர்கள் அறிவித்தார்.

தமிழின முன்னேற்றத்திற்கு உறுதியான வழிமுறைக் கொள்கையாக, இந்திய தேசிய நீரோட்டத்தில் இணைந்து போவது சரி என 7 பேரும், தமிழ் நாட்டரசுக்கு மிகு அதிகாரங்கள் உடைய மாநிலத் தன்னுட்சி (சுயாட்சி) பெறுவதே சரி என 23 பேரும் ஒப்போலை அளித்தனர். **தமிழ்நாட்டை முழு இறைமையுடைய தனிநாடாகப் பிரித்துத் தமிழரே ஆளுமை செய்வதுதான் சரி என்பது 208 பேர் கருத்தாக இருந்தது.** 3 ஒப்போலைகள் செல்லாதவையாக ஒதுக்கப்பட்டன.

ஒப்போலை அளித்த 241 பேர்களில் தனித் தமிழ்நாட்டுக் கொள்கைக்கு 87 விழுக்காட்டினர் ஆதரவு தெரிவித்துள்ளதை அறிவித்தபோது அரங்கினர் ஆரவாரத்துடன் 'தமிழ்நாடு தமிழருக்கே' எனப் பொங்கும் உணர்ச்சியுடன் முழக்கமிட்டனர்.

கருத்தரங்கில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை விளக்கியும், அதைச் செயல்படுத்திடக் காலம் கனிந்து விட்டமையை உணர்ந்து முனைவு கொள்ள வேண்டிய இன்றியமையாமையினை வற்புறுத்தியும் அரிய உரை நிகழ்த்தினர் பாவலரேறு ஐயா அவர்கள்.

தென்மொழி **நா. இளமாறன்** நன்றியுரை புகன்ருர். அரங்கினர் அனைவரும் தமிழ்நில விடிவினையே நெஞ்சில் தாங்கியவராய் விறுகொண்ட உணர்வுடன் கலைந்தனர். (முற்றும்)

# ஒரு தேசிய விரும்பியின் பார்வையில் தொலைக்காட்சி!

***"நான் ஒரு தேசிய விரும்பி; இந்தியை எதிர்ப்பவன் அல்லன்... எனினும் தில்லி ஆட்சியில் தென்னாட்டவர் புறக்கணிக்கப்படுவதையும் இந்தி திணிக்கப்பெறும் ஒழுங்கற்ற செயலையும் என்னால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை."***

"தொலைக்காட்சியில் தேசிய நிகழ்ச்சி என்பதற்கு என்ன பொருள்?

வடநாட்டு நிகழ்ச்சிகளே அவை. இந்தி பேசும் பகுதிகளில் வாழும் மக்கள் மட்டுமே தேசிய நிகழ்ச்சிகளைப் புரிந்து கொள்ளவும் சுவைக்கவும் முடியும்.

***தொலைக்காட்சி முழுவதுமே குறுமதி படைத்தவர்களிடம் சிக்கிக் கொண்டுள்ளது. இவர்கள் கொடியவர்கள்; நாட்டில் தற்போது நிலவும் கொஞ்சநஞ்ச ஒருமைப்பாட்டையும் சீர்குலைந்து போகும்படியாகச் செயல்படுகின்றனர்.***

இந்தி பேசும் பகுதிகள் மட்டுமே முழு இந்தியா என்பதுபோல் சித்தரித்துக் காட்ட முயல்கின்றனர். இந்திக்கே முதன்மை கொடுத்து, இந்தி பேசாத மற்ற பகுதிகளை எல்லாம் புறக்கணித்து இருட்டடிப்புச் செய்கின்றனர்.

இந்தி! எங்கும் எப்பொழுதும் இந்தி எனில் எலூருவிலும், குண்டக்கல்லிலும், திருத்தணியிலும் நெல்லையிலும், சிக்மகளூரிலும், கொல்லத்திலும், கிரிஞ்சாலகுடாவிலும் தொலைக்காட்சியைக் காண்பவர்க்கு அதில் கொஞ்சமேனும் புரியுமா?

தென்னாட்டவர் ஏன் தொலைக்காட்சி பார்க்கிறார்கள்? ***வேறு எவ்வழியும் இல்லாமல்தான் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது.*** தண்டனை பெற்ற சிறையாளிகள் (கைதிகள்) போல வடவர் நிலக்கதை, கலைநிகழ்ச்சி, பண்பாடு இவற்றைப் பார்த்துக் கொண்டுள்ளனர்.

சில நேரங்களில் நல்ல நிகழ்ச்சிகள் ***காட்டப்படுவதும் உண்டு.*** சான்றாக விடுதலை பெற்றளித்த ***தலைவர்களின் வாழ்க்கைச் சித்திரிப்புகளைக் கூறலாம்.*** இவற்றை முதியவர்களும் காண்கின்றனர். இளந்தலைமுறையினர்க்கும் பயன்தருவன. ஆனால் இவற்றை எம்மொழியில் காட்டுகின்றனர் எனில் இந்தியில்தான்.

***மாராட்டிர மாநிலத்தவரான திலகரின் வரலாற்றை மராத்தி மொழியில் காட்டினால் என்ன?*** மராத்தி, இந்தி என எம் மொழியில் காட்டினாலும் தென்னாட்டார்க்குப் புரியாது. ***ஆனாலும் மராத்திமொழியில் காட்டினால் அம்மொழி பேசும் மக்களாவது மகிழ்வார்களே!***

ஒரே விடாப்பிடியாக இந்தியிலேயே காட்டுகிறார்களே!

குடியரசு நாள், விடுதலை நாள்களில் செனாய் கருவியில் மட்டுமே இசைக்கின்றனர். அது தென்னாட்டவர்க்கும் பிடித்த இசைதான். ***எனினும் தமிழ்நிலத்திற்கே உரிய வங்கியத்தினை*** (நாதசுரத்தை) ***அந் நாள்களில் பயன்படுத்தினால் என்ன?*** இத்தகைய விழாக்களின் போது இசைத்திட வங்கியத்தை விட எழுச்சியான இன்னிசைக் கருவி வேறுண்டா?

ஆனால் தில்லித் தொலைக்காட்சியினருக்கு வங்கிய (நாதசுர) இசைபற்றி எதுவும் தெரியுமா என்பதே ஐயம்தான்.

***தேசிய நிகழ்ச்சிகள் என்கிற பெயரால் இவ்வாறு இந்தியைப் புகுத்தித் தென்னாட்டவரைப் புறக்கணிக்கும் ஒழுக்கக் கேட்டினை எதிர்த்துத் தென்னாட்டைச் சேர்ந்த நான்கு மாநில அரசுகளும் ஏதேனும் செய்ய வேண்டும்.*** தென்னகத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த இருட்டடிப்பையும் இந்தித் திணிப்பையும் எதிர்த்திட முன்வர வேண்டும்."

—இவ்வாறு உள்ளம் நொந்து எழுதியிருப்பவர், **ஆர். கோபாலகிருட்டிணு** என்னும் இந்தியத் தேசியப் பற்றாளர். (19-10-86-ஆம் நாள் 'விளக்கக் கிழமையிதழ்') (Illustrated weekly) இவரது இக் கட்டுரையை வெளியிட்டுள்ளது.

இந்தியத் தேசியப் பற்றாளராக இருப்பினும் ***இந்தி மொழியில் தேசிய நிகழ்ச்சிகளை ஏற்றுக் கொள்ள இயலாது*** என்பதை நடுநிலையோடு வெளிப்படுத்தியுள்ளார், கட்டுரையாளர்.

நடுவணரசும் அவ் வரசின் கைக்கருவிகளான தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள்களும் பல வகையிலுந் தென்னாட்டவரைப் புறக்கணிப்பதோடன்றி, அவர்களை அடிமைகளாக்கி வைத்திருக்கின்றன. அழித்தொழிக்க முற்படுகின்றன. **ஆர். கோபாலகிருட்டிணு** போன்ற நடுநிலைச் சிந்தனையாளர்கள் இவற்றைப் புரிந்து கொள்ளவும் போர்க் கொடியேந்தவும் நெடுநாளாகாது என நம்புகிறோம்.

—**ஆடவை.**

Scanned with CamScanner

# நாட்டு நடப்புகள்!

## 1. மாற்றம் நோக்கி!

எளிய மக்களின் எண்ணிக்கை 'இந்தியா' வில் ஆண்டுதோறும் வளர்ந்து கொண்டிருக்கிறது.

1960 - 61-இல் 17 கோடி
1970 - 71 இல் 22 கோடி
1977 - 78 இல் 28 கோடி

—மக்கள் செய்தி 6-12-78- என்ற புள்ளி விளக்கம் இன்றும் கூடிக் கொண்டேதான் உள்ளது. "வறியவர் கூட்டம் வளர்ந்து வருவதை மக்களின் வாழ்நிலை உணர்த்திக் கொண்டுதான் உள்ளது.

ஆயினும், நடுத்தர மக்களோ, தொழிலாளிகளோ, உழவர்களோ, நாட்டின் தலைவர்களோ இதனைப் பற்றி ஆழமாக எண்ணித் திட்டமிட்டுப் போராடுவதாக இல்லை.

'தொழிலாளி' என்பது ஒரு பொதுமையான சொல். அவன் இன்று, பாட்டாளி நிலைமையுள்ளவன் அல்லன். தனியுடைமை உடையவனாகவும் முதலாளி ஆகத் துடிப்பவனாகவும் உள்ளான்.

ஒரு சொத்துமில்லாதவனாக, உழைப்பை விற்பதன் மூலம் மட்டுமே வாழ்பவனாக, தன் உழைப்புப் பயனின் ஒரு பகுதியைப் பறிகொடுப்பவனாக, எதிரியை இனம் காணும் திறமை, உணர்ச்சி உடையவனாக உள்ள பாட்டாளியால் மட்டுமே உலகக் கொடுமைகள் தீர்தல் இயலும்; விடுதலை விரைந்து தோன்றும்.

தமிழ்நாட்டின் அரசியல், பொருளியல், பண்பாட்டு விடுதலைக்கு எதிரியை இனம் காட்டினால் அதனை விளங்கிக் கொண்டு போர்க்குரல் எழுப்பிக் களத்தில் இறங்குகிறவன் பாட்டாளி அன்றோ?

நம் நாட்டு மூலப் பொருள்கள் ஏற்றுமதியாகவும், அனைத்து விளைவுகளையும் இந்திய அரசு கட்டி ஆளவும், வைப்பகம் யாவும் இந்திய அரசின் கட்டுக்குள் இருக்கவும் காண்கிறோம். அரசின் பெரிய தொழில், பொருளியல் அமைப்பு யாவும் இந்திய அரசின் பிடிக்குள் அகப்பட்டுக் கிடக்கவும் பார்க்கிறோம்! ஆகவே, தமிழ்நாடு, ஒரு வல்லரசின் கைப்பிடியில் தளர்ச்சிப்பட்டு, சீரழிந்து வரக் காண்கிறோம்.

## 2. யார் திணிப்பது? யாரால் திணிக்க முடியும்?

"இராசீவ் காந்தியோ இந்தியைத் திணிக்கிறார்; இவர்களோ (கருணாநிதியும், எம். சி. இராமச்சந்திரனும்) ஆங்கிலத்தைத் திணிக்கிறார்கள். நாங்கள் (இந்தியப் பொதுவுடைமைக் கட்சி மார்க்சியர்) தமிழ் உள்பட அனைத்துத் தேசிய மொழிகளிலும் அறமன்றம், 'ஆட்சி நடை பெற வேண்டும் என்று கோருகின்றோம்"

—இ. எம். எசு. —

14 தேசிய மொழிகள். அவை அனைத்திற்கும் சமவாய்ப்புக் கிடைக்குமென நினைப்பது இந்த அரசினால் ஆகக் கூடியதன்று. தேசிய இன மொழிகள் ஒதுக்கப்பட்டிருப்பதை, அதற்கு இ. எம். எசு. போன்றவர் துணை நின்று வருவதை வரலாறு அறியும்.

ஆங்கிலம் ஏற்கனவே திணிக்கப்பட்டு அதிகாரத்தரப்பு அலுவல் மொழியாக வுள்ளது. இப்போது, 'இந்தி'க்கு அந்த இடம் தரப்படவுள்ளது, அதனினும் மேலாக ஆட்சிமொழி பொது மொழி என்ற தகுதியை இந்திக்குத் தர ஆலாய்ப் பறக்கின்றனர் ஆளும் கணத்தார்!

ஆங்கிலமும், இந்தியும் தமிழ் மொழியின் இரண்டு தோள்களிலும் ஏறி அமர்வதை நாம் பொறுத்துக் கொள்ளுதல் இயலாது.

அதேவேளை, இந்தி பேசும் மக்கள் மீது பரிவு காட்டுவது என்பது அவர்களிடம் உருவாகியுள்ள 'பேரினவெறி'யை வளர்த்திடத் தீனி போடுவதாகும் என்பதை இ. எம். எசு. போன்றவர் நினைத்துப் பார்த்தல் நல்லது.

தமிழில், அந்தந்தத் தாய்மொழியில் பொதுவுடைமைக் கட்சி தன் பெயரை எழுதப் பழகிக் கொள்ளுதல் நல்லது. உலகக் கண்ணோட்டம் என்ற பேரில் 'தாயின்' இடத்தைப் பறிப்பது தாய் மொழிக்கல்வியில் அக்கறை கொண்டுள்ளவர்களுக்கு அழகாகாது!

## 3. பொல்லாத பொள்ளாச்சி மகாலிங்கம்!

தமிழ்த் தேசிய முதலாளி பொள்ளாச்சி மகாலிங்கம் தாய்மொழிக் கல்வி, தேசியப் பண்பாட்டிற்கு எதிரானவா என்பதை நிறுவி விட்டார். அவர் வகுப்புக் குணம் அது! முதலாளியின் தீவிரச் சுரண்டல் பண்பு சிந்தனையில் நாகமெனச் சீறி வெளிப்படுகிறது.

'இந்திய ஒருமைப்பாட்டிற்குச் சமற்கிருதமே தேசியமொழி; ஏற்றமொழி; அனைவரும் ஏற்கும் மொழி' என்ற கருத்திற்கு 'மகாலிங்கனார்' அடிமையானாரே! அறிவியல், இயங்கியல், மக்கள் அனைவர்க்கும் எதிராக மதம் செயல்படுவது இப்படித் தான் என்பதற்குத் 'தமிழர் மகாலிங்கமே' ஒரு சான்றன்றோ?

ஏட்டு மொழிக்கு நாட்டில் இடம் தேடும் பொல்லாத மனம் இந்தப் பொள்ளாச்சி அறிஞர்க்கு வந்ததேன்?

தாய்மொழியைத் தள்ளி வைத்து மணம் மகிழ இந்த 'மகாலிங்கம்' முயல்கிறார் எச்சரிக்கை!

—பறம்பை அறிவன்.

# சிற்றூர்ப்புற மக்கள் ஓடிவருகின்றனர்..!

முதலாளியமும், அரசும் சேர்ந்து கொண்டு நல்ல விளைச்சல் நிலங்களையும், காடுகளையும் அழிக்கின்றன. வெளிநாட்டு மூலப்பணத்தைப் பெற்றுக் கொண்டு தொழில் நடத்தவும், அத் தொழிலுக்கென வடநாட்டு, வேற்று இன மக்களைத் தமிழகத்தில் குடியேற்றவுமான வேலை தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

காடுகள் அழிக்கப் படுவதால் மழை பொய்க்கிறது.

இந்நிலையில் பசுமைப் புரட்சி என்று வேறு ஏமாற்று.

நிலத்தடி நீர் அழிக்கப்படுவதோடு, அதற்கு அடிப்படையான குளம், ஏரிகள் தூர்க்கப்படுகின்றன. இதனால் கடல் நீர் நிலத்திற்கு அடியில் புகுகின்றது.

ஏமாளித்தனத்தினால் காவிரியும் வறண்டு விட்டது.

—தமிழ்நாடே பாலைநிலமாக மாறி வருகிறது,

இந்நிலையில் இங்குள்ள முதலாளி, அரசுகளின் சுரண்டலுக்காக வல்லரசு நாடுகளின் தொழிற்சாலைகள் உருக்கொள்ளுகின்றன. அதன் நச்சுக் கழிவு நீர்களும், நீர்த் தேக்கங்களில் சேர்ந்து மண்வளத்தைக் கெடுக்கின்றன.

உழவு செய்ய முடியாத சிற்றூர்ப் புறங்களில் யூக்லிப்டசு, சாலி, கருவேல மரங்கள் நடப்படுகின்றன. அவை வெளிநாட்டுச் சுரண்டலுக்கென தாள் தொழிலுக்குப் பயன்படுகின்றன. இதனால் கூலி ஏழை உழவர்கள் நகர்ப்புறங்களை நோக்கிப் பிழைப்புத் தேடி ஓடி வருகின்றனர்.

—இவை எதுவும் கற்பனை இல்லை.

—நடந்து கொண்டிருக்கிற உண்மை.

இன்றைக்குத் திருச்சி மாவட்டம் வறண்டு கிடக்கிறது. திருச்சி மாவட்டத்தின் 12 ஊராட்சி ஒன்றியங்களின் 235 சிற்றூர்ப்புறங்கள் கவலைக்கிடமாய் இருக்கின்றன.

கடந்த 10-ஆண்டுகளாக மேற்காட்டிய காரணங்களால் மழை இல்லை.

எனவே கடும் வறட்சி!

இந்தப் பத்தாண்டுக் கால வறட்சியைப் பற்றி இது நாள் எதுவும் வாய்திறவாமல் தூங்கிக் கொண்டிருக்கிறது இந்த அரசு.

நிலை இன்றைக்கு மிகவும் கடினமாகப் போய் விடவே, சில மாற்றுத் திட்டங்களை அறிவித்திருக்கிறது.

நிலவரி நீக்கம்,

ஓர் அயிர எடை (K. g.) அரிசி 1.85 மேனியும், கோதுமை உரு 1-50 மேனியும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப் பெறும் என்றும், இதற்கென 1000-கல்லெடை (Ton) அரிசியும், 700 கல்லெடை கோதுமையும் ஒதுக்கப் பட்டுள்ளன என்றும் கூறியது அரசு.

இதற்கெனத் திருச்சி மாவட்ட ஆணையர் அரசிடம் கேட்டுக் கொண்ட தொகை உரு. 16 கோடியே, 19 இலக்கம்.

—இந் நிலை இப்படி இருக்க, இன்றைய மக்களின் நிலை என்ன தெரியுமா?

0 சிற்றூர்ப்புற மக்களுக்குக் குடிக்கக் கூடத் தண்ணீர் இல்லாமல் பல கல் தொலைவு சென்று தண்ணீர் எடுத்து வரவேண்டியிருக்கிறது.

0 உழவு செய்து கொண்டிருந்த கூலி உழவர்கள் வேறு வேலை தேடியும், வேற்றூர்களுக்கு ஓடியும்வருகின்றனர். இதனால் குறைந்த கூலியிலேயே எங்காவது வேலை கிடைத்தால் போதுமென, வயிறு கழுவ விலங்கு வாழ்க்கை வாழ்கின்றனர்.

0 சிறு நிலவுடைமையாளர்கள் நிலங்களையும், ஆடு, மாடுகளையும் குறைந்த விலைக்கு விற்றுவிட்டு நகரங்களை நோக்கி ஓடி வருகின்றனர்.

—இங்ஙனம் தமிழக மக்கள் அல்லல்படுவதற்கான அடிப்படைக் காரணங்களை இந்த அரசும், முதலாளிகளுமே செய்துவிட்டுப், புண்ணுக்குப் புனுகு பூசுவது போல், மக்களின் - பஞ்சப் பட்டினிக்கு இரவு (பிச்சை) போட்டுக் கொண்டிருக்கின்றது அரசு.

—என்றைக்கு விளைச்சல் பொருள்கள் அனைத்தும் விளைவித்தவர்களுக்கென்று ஆகின்றனவோ,

—என்றைக்கு உழைக்கும் மக்களை வருத்திச் சுரண்டிக் கொழுக்கும் முதலாளியமும், அரசும், பன்னாட்டு மூலப்பணங்களும் அடியோடு வெட்டி வீழ்த்தப்படுகின்றனவோ,

—என்றைக்குத் தமிழ்நாட்டின் உருவாக்கப் பொருள்கள், வேளாண்மைப் பொருள்கள் எல்லாம் தமிழக மக்களுக்கு என்று மாறுகின்றனவோ,

—அன்றைக்கே இத் தமிழக மக்களின் வாழ்வு மலரும் நாளாகும்.

—அவ் வெழுச்சி நாளை நோக்கி அந்த ஆளும் பிரிவினரை எதிர்த்து, உழைக்கும் மக்களாகிய நாம் போர் செய்வோமாக!

உண்மைத் தமிழ்நாடு பொதுமை அரசை அமைப்போமாக?

—பொதுமை விரும்பி.

Scanned with CamScanner

தொடர் 2

முன்னிதழ்த் தொடர்ச்சி

# மொரீசியசு தீவில் தமிழர்கள்!

இந்தியாவிலிருந்து மொரீசியசில் குடியேறிய வர்களுள் தமிழரே மிகவும் பண்பாடு உடையவரா யிருந்தனர். அவர்கள் தம் (தமிழ்) மொழியை அறிந்தவராயும், சிலர் அதில் புலமை சான்றவர் களாயும் இருந்தனர். பலர் ஆங்கில மொழியறி வும் பெற்றிருந்தனர். மற்றும் பலர் தமிழ் இலக்கி யங்களிலும் இசையிலும் வல்லவராயிருந்தனர். அவர்கள் சிறந்த நாடகக் கலைஞர்களாக இருந்தனர் என்பதிலிருந்து இவ்வுண்மையினை அறிகிறோம். பொதுவாக ஒரு பந்தலின் கீழ் மேடையிட்டு அரிச் சந்திரன், தமயந்தி, சாவித்திரி, மார்க்கண்டேயன், நல்லதங்காள், நந்தனார் மற்றும் இராமாயண, பாரதக் கதை நிகழ்ச்சிகளை நடத்தினர். கருநாடக இசை (தமிழிசை) நுட்பங்களை முறையாகப் பயின்ற தமிழர்களும் இருந்தனர்.

அத் தமிழர் மிகுந்த மத நம்பிக்கையினராய் இருந்தனர். எல்லா இடங்களிலும் கோயில்களைக் கட்டினர். இன்று மொரீசியசில் கல்கத்தீ (Culcuteea) மக்களை விடத் தமிழர் தொகை குறைவே. எனினும் அவர்களின் கோயில்களை விடத் தமிழர் கோயில்கள் மிக அதிகமாகக் காணப் படுகின்றன. இன்றுள்ள கோயில்களுள் கல்கத்தீ யர்கள் கட்டிய மிகப் பழமையான கோயில் 50 ஆண்டுகளுக்கு முற்பட்டது; ஆனால் தமிழரது கோயில் நூற்றாண்டுகளுக்கும் முந்தினவாக உள் ளன. சான்றாக கிளமென்சியா (Clementia) என் னும் இடத்தில் உள்ள அழகிய கோயில் 1850-இல் கட்டப்பட்டதாகும்.

அங்குக் குடியேறிய தமிழர்கள் சிறந்த உழைப்பாளிகள் எனப் பாராட்டப் பெற்றனர். அவர்கள் கடும் உழைப்பாளர்களாக மட்டுமின்றி மேலான அறிவாளிகளாகவும் இருந்தனர். 1845-இல் அமைக்கப்பட்ட ஓர் உசாவல் குழு இந்தியத் தொழிலாளர்களிடையே மிகச் சிறந்த உழைப் பாளர்கள் தமிழரே என்று அறிக்கை வெளியிட் டது. எனவே, விடாமுயற்சியும் கூர றிவும் தேவைப்படும் 'சர்தார்', தூதுவர், வண்டிப் பொறுப்பாளர், Boiler போன்ற பணிகளுக்குத் தமிழரே ஏற்றவர்களாகக் கருதப்பட்டதில் வியப் பில்லை.

கல்வி வளர்ச்சியில் 19-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்தே தமிழர்கள் பயனுள்ளவர்கள் எனக் காட்டி வந்துள்ளனர். அக் காலத்தில் லூயிசு துறைமுகத்தின் புறநகர்ப் பகுதி முழு வதுமே தமிழர்கள் குடியிருந்தனர். அப் பகுதியின் பல தெருக்கள் தமிழ்ப் பெயர்களைப் பெற்றிருப்பது இதற்குச் சான்றாகும். பலியகா (பலேயகர்) இஞ்ஞாபட்டினம், வேலூர் என்பவை 1829க்குப் பின்னும், மதராசு, காரைக்கால், காளிக்கட்டம், மதுரை, மைசூர், தரங்கம்பாடி, திருச்சிராப்பள்ளி, மலபார் முதலியன 1828க்கு முன்னும் தெருக்களுக் குப் பெயராக இடம் பெற்றவையாம். (தொடரும்)

# தூவல் இல்லாமல் கையெழுத்திட்ப் போகலாமா?

உள்நாட்டு மக்களின் நெருக்கடிகளிலிருந்து இப்போதைக்குத் தங்களை விடுவித்துக் கொள்ளவும் அவர்களின் கவனத்தைச் சிக்கல்களிலிருந்து திசை திருப்பவும் இந்தியத் தலைமை அமைச்சரும், பாக்கித்தான் தலைவரும், எல்லையில் படைக்குவிப்புப் போர் அச்சம், போர் அணியம், பேச்சு போன்ற காட்சிகளைக் கொண்ட நாடகத்தை நடத்தி வரு வது நாம் அறிந்ததே. நாடகத்தின் அடுத்த காட்சியில் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

இந்த ஒப்பந்தத்தில் இரு நாட்டு அரசுத் தலைமைச் செயலர்களும் கையெழுத்திட வேண்டும். இரு நாடுகளுக்கு இடையிலான ஒப்பந்தத்தில் ஊற்றுத் (fountain pen) தூவலினைக் கொண்டு கையெழுத்திட வேண்டுமாம். கோலிமுனைத் (ball point) தூவலைப் பயன்படுத்தக் கூடாதாம்.

ஆனால் இந்த ஒப்பந்தத்தில், குறிப்பிட்ட நேரத்தில் இரு நாட்டுச் செயலர்களும் கையெழுத் திட முடியவில்லை. ஏனெனில் இவர்களிடமும் இவர்களுக்குத் துணையாக விருந்த பல அதிகாரி களிடமும் கோலிமுனைத் தூவலே இருந்தது. ஊற்றுத் தூவலுக்கு அலைந்தனர். இறுதியாக அந் நிகழ்ச்சிக்குச் செய்தி தொகுக்க வந்திருந்த செய்தியாளர் ஒருவரிடம் தூவலை வாங்கிக் கையெழுத்தட்டனர். அந்தச் செய்தியாளரிடமும் தூவல் இல்லாதிருப்பின் ஒப்பந்தம் ஏற்பட்டிருக் காதோ? இவர்களை எல்லாம் என்னென்பது? மக் கள் வரிப்பணத்திலிருந்து ஆயிரம் ஆயிரமாக சம் பளம் பெறும் இந்த அதிகாரக் கூட்டத்திற்கு முகாமையான இந்தச் சிறு செயலில் கூட அக் கறை இல்லை; கவனம் இல்லை. என்ன செய்வது? நடப்பது மக்களரசல்லவே! மாக்களரசுதானே! இப்படித்தான் இருக்கும். தமிழன் இந்திக்கார னுக்கு அடிமையாக இருக்கும்வரை இத்தகைய அவலங்களையெல்லாம் பார்த்துக் கொண்டுதான் இருக்க வேண்டும்!

—குணத்தொகை.

# பேரா். தமிழ்க்குடிமகனுர்க்கு ஒரு விளக்க மடல்!

அன்பு சான்ற ஐயா, கடந்த 10-2-87 - ஆம் நாளிட்ட தமிழ்நிலம் இதழில் முனைவர் மு. தமிழ்க் குடிமகன் அவர்களின் மடலைப் படிக்க நேர்ந்தது. அம் மடலில் அவர் மேலே வந்துவிடாமல் தடுத்த தாகவும், உ. த. க. வை உயிர்ப்பிக்க நெய்வேலி யில் அவர் எடுத்த முயற்சியை இரண்டொரு நாளிலேயே தாங்கள் முறியடித்ததாகவும் குறை கூறி எழுதியிருந்தார். அதையொட்டி அவருக்கு விடையளிக்கும் முகமாகவே இம்மடலை எழுத நேர்ந்தது.

பறம்புக்குடியில் அவர் ஏற்று நடத்திய உ. த. க. மாநாடு சிறப்புறவே நடந்தது. அக்கால் நான் நீலமலை மாவட்ட உ. த. க. அமைப்பாளனாக இருந்தேன். உ. த. க. வின் முதல் கிளையே நீலமலை யில்தான் தொடங்கப் பெற்றது. அந்தப் பறம்புக் குடி மாநாட்டிற்கு முதல் நன்கொடையே நீலமலை மாவட்டத்தில் இருந்துதான் என்பதை அவர் அறிவார்.

இருப்பினும் அதன்பின் நெய்வேலியில் நடை பெற்ற உ. த. க. வை உயிர்ப்பிக்கும் முயற்சிக்கு எனக்குச் செய்தி அனுப்பப் பெறவில்லை.

அந்த உயிர்ப்பிக்கும் முயற்சியைப் பற்றிப் பாவணரே நேரில் என்னிடம் தெரிவித்தார். **அஃதாவது உ. த. க. வின் தலைமைப் பொறுப் பைப் பாவாணர் விட்டுவிட வேண்டுமாம்; உ.த.க வின் தலைவர் வேறு ஒருவர் என்றும், அதன் பொதுச் செயலர் திரு. தமிழ்க் குடிமகன் என்றும் அந்தக் கூட்டத்தால் தீர்மானிக்கப் பெற்றதாகக் கூறினர்.** அதைப் பாவாணரே ஒத்துக் கொள்ளா மல்தான் அவர், புலவர் **இறைக்குருவனரை** உ. த. க. வின் பொதுச் செயலராக்கினர். பாவா ணர் கருத்துப்படி "உ. த க. வின் அமைப்பு பெரி யார் இயக்கத்தைப் போன்றது. திருவள்ளுவர், மறைமலை அடிகள், பாவாணர் ஆகியோரைத் தவிர வேறு ஒருவர் அதற்குத் தலைவராக முடி யாது" என்பதாகத் தெரிவித்தார். எனவே அது குறித்துத் திரு. தமிழ்க்குடிமகன், ஐயா பெருஞ்சித் திரனர் மேல் வருத்தப் பட்டுக் கொள்ள ஏதும் இல்லை என்பதை அவர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மேலும் தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கிற்கு அவர் வருவதும் வராமலிருப்பதும் தமிழ்க்குடிமகன் அவர்களுடைய விருப்பம்தான். ஒருபுறம் சாதி அமைப்புகளில் பொறுப்பேற்றுக் கொண்டும், இடத்திற்கும், நேரத்திற்கும் தக்க வாறு தங்களை விற்றுக் கொண்டுமுள்ளவர்கள் *ஐயா பெருஞ்சித்திரனர்* அவர்களைப் பின்பற்ற இயலாது தான்! திரு. தமிழ்க்குடிமகன் என்ன தொண்டு செய்கிறரோ அவருக்கே வெளிச்சம்!

ஆனல், அருள் கூர்ந்து அவர் ஆற்றும் சொற்பொழிவுகளை ஒரு முறை அவரே திரும்பக் கேட்டுப் பார்க்கட்டும். அப்போதுதான் அவர் செய்யும் தமிழ்க் கொலைகள் எவ்வளவு என்று அவருக்குத் தெரியும். அஃதாவது அவர் சொற் பொழிவு உடனே மறுக்கப்பட்டுவிடும். அண்மை யில் ஓர் அன்பர் குறள் வெண்பாவில் வெளியிட்ட சிறு நூலைப் பாராட்டித் திருவள்ளுவரைக் காட்டி லும் சிறந்த வெண்பாக்களை எழுதியுள்ளதாகக் கூறியுள்ளார். என்றல் இவரின், புலமையை எப்படி எடையிடுவது என்றே தெரியவில்லை.

Doctor என்னும் சிறப்புப் பட்டத்திற்குப் பாவாணர் '*பண்டாரகர்*' என்ற சொல்லைக் கண்டு கூறினர். **முனைவர்** என்ற சொல் உலகப் பற்றை விட்ட அறிஞர்களுக்கே பொருந்தும் என்பது பாவாணர் கருத்து. அப்படியிருக்க திரு.தமிழ்க்குடி மகன் பாவாணர் அறிவுக்கே மதிப்புக் கொடுக்காத வர் உ. த. க. வை எப்படி வளர்த்திருக்க முடியும்?

எப்படியோ ஆக்கத்திற்குத் துணை செய்யா விட்டாலும் பொய் கூறிப் பழி தூற்றுமல் இருந் தால் அஃது அவருக்கு நல்லது என்ற அளவில் இதை முடிக்கிறேன். அன்புடன்

தென்மொழி **நா. இளமாறன்**, சென்னை-57.

அன்பின் அய்யா அவர்கட்கு, நலம்! நலம் காண நாட்டம்; நிற்க; தமிழ்நிலம் (10-2-87.) கிடைக்கப் பெற்றேன். அதில் 45-ஆவது மடலின் படி **தங்களைப் பின்பற்ற இயலாமல் போயிற்று** என்று தமிழ்க்குடிமகனர் எழுதி உள்ளது உண்மை தானு? ஏன் அவருக்கு அந்த நிலை? அவரும் வாசவிக் கல்லூரிப் பேராசிரியர் வழி சித்து வேலை களைக் காண்பித்தாரா என்பதை எனக்கெழு துங்கள். குறுக்குச்சால் மற்றும் கழுத்தறுப்பு, குழிபறிப்பு- இவற்றையெல்லாம் தெளிவாகவே எழுதிவிடுங்கள். கொள்கைக்கும் கடின உழைப் பிற்கும்தான் இங்கு வேலை!

—*மு. உலகமுதல்வன்*, க. மு, திருவண்ணமலை.

## தமிழகம் பிரியாமல் தமிழினம் முன்னேருது!

# தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு நன்கொடை பட்டியல்!

| | | |
|---|---|---|
| | முன் மொத்தம் | 9754-50 |
| | திருவாளர்கள். | |
| 138. | வை. வீருண்டான், தாஞ்சூர். | 21-00 |
| | அவர் வழி வந்த வரவு. | |
| 139. | ம. சுப்பிரமணியம், | 11-00 |
| 140. | ந. அனந்தநாராயணன், | 10-00 |
| 141. | செ. வசந்தா, | 10-00 |
| 142. | ஆ. கோவிந்தராசன், | 10-00 |
| 143. | பெ. கிருட்டிணன், | 5-00 |
| 144. | சி. இராசலிங்கம், | 5-00 |
| 145. | கண. பிரேமா, | 5-00 |
| 146. | இராம. சுந்தரராசன், | 5-00 |
| 147. | வீரப்பன், பனையூர். | 5-00 |
| | கி. குணத்தொகையன். சென்னை. திரட்டியளித்த தொகை. | |
| 148. | அ. மதிவாணன், சென்னை. | 10-00 |
| 149. | பி. ஆர். செல்லையா, சென்னை. | 5-00 |
| 150. | பொன். வில்வநாதன், | 10-00 |
| 151. | கோ. இராம்மோகன், சின்மயாநகர். | 10-00 |
| 152. | வ. திருவேங்கடம், சென்னை. | 5-00 |
| 153. | பி. இராமகிருட்டிணன், கல்லிடைக் குறிச்சி | 5-00 |
| 154. | சு. கருணாமூர்த்தி, சென்னை. | 5-00 |
| 155. | கா. மாணிக்கம், பட்டினப்பாக்கம். | 10-00 |
| 156. | கே. என். செந்தாமரை, சென்னை. | 10-00 |
| 157. | அ. சிவானந்தம், சென்னை. | 5-00 |
| 158. | தா. தா. சாம்ராசு, சென்னை. | 5-00 |
| 159. | கோ. புட்பவல்லி, சென்னை-14. | 5-00 |
| 160. | மா. இராமஇலட்சுமி, மீனம்பாக்கம். | 10-00 |
| 161. | க. இலலிதவேலன், ஆரணி. | 5-00 |
| 162. | புலவர். தமிழ்வேந்தன் எழில், கல்லக்குறிச்சி. | 20-00 |
| 163. | இரா. வெங்கடேசன், செம்பரும்பட்டு | 3-00 |
| 164. | வெங்கடாசலம், சங்கராபுரம். | 2-00 |
| 165. | எசு. எம். ஆர். தமிழன்பன், மலேசியா. | 80-00 |
| | வேலூர் குமர. தன்னொளியன் வழி இரண்டாம் முறை வந்த வரவு. | |
| 166. | தேவராசன், | 15-00 |
| 167. | மார்த்தாண்டன், | 10-00 |
| 168. | தா தாமோதரன், | 3-00 |
| 169. | நெய்வேலி சுப. திருமாறன் வழி வந்த வரவு. | 165-00 |
| | (பெயர்ப்பட்டியல் பின்னர் வரும்.) | |
| | மொத்தம். | 10239-50 |

(தொடரும்)

# கருத்தரங்கை வரவேற்று வாழ்த்திய நெஞ்சங்கள்!

**36. உண்மை ஒளி இருள் நீக்குக!**

அன்பு கனிந்த அய்யா! வணக்கம்... கருத்தரங்கு சிறப்புடன் நடைபெறவும், அக் கருத்தரங்கின் வாயிலாகத் தமிழக, தமிழின மீட்சிக்கு ஆவன செய்யும் நம் முயற்சி வெற்றியடையவும் தமிழன்னையை இறைஞ்சுகிறேன். தங்களின் செய்தற்கரிய பெருந்தொண்டு சிறக்கவும், கயவர் வெட்கி மடியவும், இனம், மொழி, நாடு என்றும் காக்கப் பெறவும், சூதும் சூழ்ச்சியும் அழியவும், உண்மை ஒளி நாடெலாம் இருள் நீக்கவும், அக் கருத்தரங்கின் செயற்பாடு அமைய வேண்டுமெனப் பணிவோடு வேண்டுகின்றேன்.

—பாவலர். தாழை. ந. இளவழகன், மணப்பாறை

**37. தன்னாட்சி வேண்டும்!**

ஐயா, நடைபெற உள்ள கருத்தரங்கில் எனது ஒப்போலையை, இம் மடல் மூலம் அறியத் தருகிறேன். 'தன்னாட்சி உள்ள தனித்தமிழ்நாடு காண்பது,

செ. ஆடலரசன், வணி. இ, குடந்தை (தொடரும்)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

சூழ் நிலைகளில் தமிழ்நாட்டுப் பிற கட்சித்தலைவர்களையும் அவர்கள் செயல்பாடுகளையும் மிகவும் கீழ்த்தரமாகவும், இழிவாகவும், அச்சுறுத்தும் வகையிலும் பேசி வருவதை நாம் பல முறை கேட்டிருக்கிறோம். அவர்கள் ஏன் தங்களை அந்த அதிகாரத் தோரணையில் வைத்துப் பேச வேண்டும் என்பதற்குரிய காரணம் அவர்களின் மனச்சான்றுக்கே விளங்கும். அவர்கள் இராசீவ் காந்தியிடமிருந்தும் பிற வடநாட்டு முதலாளிகளிடமிருந்தும் பெறும் வாய்க்கரிசிக்காக இவ்வாறு தன்னுணர்வின்றித் தன்மானம் இன்றித் தாங்கள் பிறந்த இனநலம் கருதாமல், மொழி நலம் எண்ணாமல் பேசுகிறார்கள் என்பது உண்மையானாலும், வடநாட்டுத் தலைவர்களில் எந்த மாநிலத்தவராயினும், இப்படி இவர்களைப் போல் தங்கள் இனநலம், மொழிநலம் ஆகியவற்றை மறந்து பேசுகிறார்களா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அவர்களுக்கெல்லாம் இல்லாத 'தேசிய'- அல்லது இராசீவ் காந்திக் கரிசனம்- இவர்களுக்கு மட்டும் என்ன அப்படி புட்டுக் கொண்டு அழுகிறது என்று இவர்கள் சிறிது நேரம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இனி இச் சிந்தனையை விடுத்து 'நாங்கள் இப்படித்தான் பேசுவோம்' என்றால், '**நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக் குலத்தின்கண் ஐயப்படும்**' என்னும் திருக்குறள் இவர்களுக்காகவே தோன்றியுள்ளது என்பதை இவர்கள் தெரிந்து கொள்வார்களாக!

()

# நூல் நலம்:

நூல்: **தமிழினம் அன்றும் இன்றும்.**

ஆசிரியர்: ***திருக்குறள்மணி இறைக்குருவனார்***
வெளியீடு: ***பைந்தமிழ்ப் பாசறை***
கிடைக்குமிடங்கள்:

1. தமிழ்ப் பாசறை, 174. பா. கலைஞர் நகர், திருவொற்றியூர் மேற்கு, சென்னை-19.
2. இறையகம், 116 திரு. வி. க. நெடுஞ் சாலை, மயிலாப்பூர், சென்னை-4.
3. தென்மொழி, 5 அருணாசலத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

80 பக்கங்கள்; விலை உருபா: 5

வாழ்வின் துறைதோறும் துறைதோறும் வளமும் நலமும் செழித்து வையகம் புகழ வாழ்ந்து சிறந்தது தமிழினம். அஃது இன்று தாழ்ந்து தளர்ந்து இழிவடைந்து கிடக்கின்றது. தன்னை உணர்ந்து தலைநிமிர வாய்ப்பின்றி நிலைகுலைந்து கிடக்கின்றது, இவ்வினத்தின் வாழ்வியலில் தொன்று நிகழ்ந்தனவும் இன்று நிகழ்வனவும் ஆகிய செய்திகளை ஒப்பிட்டு உள்ளங்கை நெல்லிக் கனி போல் விளக்கிக் காட்டும் நூல் இது.

அன்று மொழிநலம் பேணி மதிநலம் சான்ற தமிழர், இன்று மொழியையும் சிதைத்து அறிவையும் சிதைத்து மேம்பாடு இழந்து நிற்கும் நிலை; அந்நாள் மருள்நீக்கும் மருந்தாக இருந்த கல்வியும் கலைகளும் இந்நாள் பொருள் ஆக்கும் கருவிகளாக வணிகர் வலைக்குள் பிணிபட்டுள்ள நிலை; அறம் புரிந்து மக்களின் உயிராகத் திறஞ்சிறந்த அன்றைய அரசு நிலை; அக் காலத்தில் அருள் கலந்த போர்முறைகள் இக் காலத்தில் விலங்கு வேட்டையாகிப் போன வெருவந்த நிலை; இன்று அணுவரையும் மோதிச் சிதைக்கும் சாதிச் சிறுமை நிலை; மெய்யுணரும் பாங்கிழந்து பொய்யாரவாரமாகி விட்ட இன்றையச் சமயச் சழக்கு நிலை; அயல் நிலங்களில் அடிமைகளினும் கீழாய் வாழும் இன்றையத் தமிழரின் இழிநிலை; அன்று தண்புனல் வற்றாத் தாய் அனைய காவிரி இன்று வெண்மணல் முற்றிய வெம்பாழ்ப் பாலையாய் வறண்ட நிலை; தாய் நாடாம் தமிழ்நாட்டில் கையற்ற தமிழர் கண்முடிக் கிடக்கச் சேய்நாடாம் ஈழத்தில் சிங்களக் கயவரால் சீரழியும் தமிழர் நிலை;

—என வகைப்படுத்தி விளக்கிக் காட்டி, மொழி, இனம், நாடு எனும் முந்நிலையிலும் ஆய்ந்து ஏற்ற முடிவெடுத்து எழுச்சியுடன் செயலாற்றத் தூண்டுகிறது இந்நூல்.

பரந்துபட்ட செய்திகளைத் தொகுத்தளிக்கும் நற்பிழிவாகிய இந்நூல், சென்னை-எண்ணூர் '***பைந்தமிழ்ப் பாசறை***'யில் ஆற்றிய சொற்பொழிவாகும். ஆசிரியர் நம்முடன் நேரே பேசுவது போலும் உணர்வுடன் எளிய, தூய, வியத்தகு நடையில் திகழ்கிறது.

தமிழினத் தொண்டாற்ற முன்வரும். புதிய அன்பர்கள் முதலில் படித்துணரவும், பலருக்குத் தெரிவிக்கவும், வேண்டிய அடிப்படை நூலாக இதைக் கொள்ளலாம். —மருத்துவர்.

நூல்: **அறிவியல் இலக்கியம்**
(சிறுவர் பாடல்கள்)

ஆசிரியர்: பாவலர் ***தமிழியக்கன்***
வெளியீடு: ***குறிஞ்சிப் பதிப்பகம்***, 5 சுப்பிரமணியத் தெரு, சென்னை-11.
கிடைக்குமிடம்: ***நியூ செஞ்சுரி புக் அவுசு(பி)லிட்***
72 பக்கங்கள்: விலை உருபா.6-00

சிறுவர்கள் பாடுவதற்கென்று சீரிய முறையில் செய்தளிக்கப் பெற்றுள்ள பாடல் தொகுதி இது. காலத்திற்கேற்ற அறிவியல் வளர்ச்சி,பெறுவதில் மிகவும் பின்தங்கிப் போயிருக்கும் நம் நாட்டில், சிறுவர்கள் பயில வேண்டிய - பயின்றுக வேண்டிய பாடல்கள் இவை போன்றவையே. எனவே இந்நூல் காலத்திற்குப் பொருந்திய தேவைத் தன்மையினைப் பெற்றுள்ளது.

கைவீசிக் கடைக்குச் சென்று கடலை பொரி வாங்குவதையே பாடலாகச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கும் நிலை மாறியாக வேண்டும். கண்ணோட்டமெல்லாம் அறிவியல் கருத்துகளோடு கலந்துறவாடுதல் வேண்டும். இந்த அணுகுமுறை செப்பமாகக் கடைபிடிக்கப் பெற்றுள்ளது இந் நூலில்.

இயற்கைப் பொருள்களின் இயக்க விளக்கங்களும் செயற்கைப் பொருள்களின் ஆக்க விளக்கங்களும் இளம் மாணாக்கர்க்கு 'ஆக்க இயல்பூக்கத்தை வளர்த்தெடுக்கக் கூடியன என்பதில் ஐயமில்லை. இவ்வகையில் சிறப்பான இந்நூலைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனமும் நல்லாசிரியப் பெருந்தகையினரும் போற்றிக் கொள்ளுதல் வேண்டும்.

தூய தமிழ்நடையும் இனிய சந்தங்களும் அறிவியலோடு கைகோத்து ஆடுகின்றன; இந்நூலின் பதிப்பு முறையும் பாடல்களைப் போலவே இளையர் உளவியலைத் தழுவி அமைந்துள்ளது.

இதிலுள்ள பாடல்களைப் பயில்வோர் நாட்டுக்கும் உலகினுக்கும் பயன்படும்படியான வாழ்நாளினைப் பெறுவர் என்பது உறுதி. —மருத்துவர்.

# நாம் தமிழர் என்று பாடு!

பாவலர் இளஞ்சித்திரன்.

எடுப்பு

நாம்தமிழர் நாம்தமிழர் என்றுபாடு!-தம்பீ,
நாடுதமிழ் நாடுநம தென்றுகூடு!
(நாம் தமிழர்)

தொடுப்பு

சோம்பியடா இத்தனைநாள் இருந்து விட்டோம்!
[- தூங்கித்
தூங்கியேநம் உரிமைகளை மறந்துவிட்டோம்!
காம்பகன்ற மலர்களென விழுந்துவிட்டோம்!
[- ஒரு
காலைவந்தது! ஒளிபிறந்தது!
எழுந்துவிட்டோம்! - நாம்
எழுந்துவிட்டோம்!
(நாம் தமிழர்)

முடிப்பு

நாம்பள்ளு பறைஇல்லை! பண்டாரம் இல்லை!
நாமெவர்க்கும் கீழில்லை! சாதிகள் இல்லை!
நாம்பிள்ளை, தேவரில்லை! வேளாளர் இல்லை!
நாலுவகை ஐந்துவகை உயர்வுதாழ் வில்லை!
(நாம் தமிழர்)

நாம்கள்ளர் என்பதில்லை; நாட்டாரும் இல்லை!
நாவிதன்,வண் ணார்களென்ற பெயர்களும்
[இல்லை!
நாம்செட்டி கவுண்டரில்லை! படையாட்சி இல்லை!
நாயக்கரோ, நாடாரோ நம்பெயர் இல்லை!
(நாம் தமிழர்)

நாம்முதலி யாருமில்லை; நாயுடும் இல்லை!
நம்மிடையில் சாதிஇல்லை! வேற்றுமை
[இல்லை!
நாம் குயவர், செம்படவர், ஆசாரி இல்லை!
நமக்கில்லை இந்துமதம்! நாமும்
[இந்(து)இல்லை!
(நாம் தமிழர்)

நாம்ரெட்டி யாருமில்லை! கோனாரும் இல்லை!
நாமினிமேல் கைக்கோளர், தேணிய
[இல்லை!
நாம்அன்னைத் தமிழ்வயிற்றுப் பிள்ளைகள்
[உண்மை!
நம்மிடையில் பிரிவெல்லைக் கோடுகள்
[இல்லை!
(நாம் தமிழர்)

அய்யரய்யங் காரரில்லை! அவர்உயர் வில்லை
ஆரியத்தைத் தழுவியவர் இருப்பதே
[தொல்லை!
மெய்ம்மொழிசெந் தமிழ்நெறியே நம்மவர்க்
[கெல்லை!
பிடுங்கவேண்டும் அவர்க்கிருக்கும்
[குலநச்சுப் பல்லை!
(நாம் தமிழர்)

உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 1

நாம் அடிமையாக இருப்பதை உணராமல் இருப்பதே இழிவான அடிமைத்தனம்!

(ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்) இதழ் எண்- 82 TN/MS (C) 657

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829;

உறுப்பினர்:
ஆண்டுக் கட்டணம் உரு. 44-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 22-00

பெறுநர்:
திரு. / திருவாட்டி

நூல் அஞ்சல்

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5